**சார்பு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, குளித்தலை.**

**2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6–ஆம் தேதி புதன்கிழமை**

**இ.ம.எண்.4/2025 இன் அ.வ.எண்.60/2017**

1. ராஜலிங்கம் (இறந்தார்)
2. முருகேசன் . . . மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/எதிர்/

சிதம்பரம் . . . எதிர்மனுதாரர்/ வாதி

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில், கட்டளை 8 விதி 3 சி.பி.சி.–ன் படி, காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களை ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | : | 25.06.2025 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 19.07.2025 |
| உத்தரவு பகரப்பட்ட நாள் | : | 08.08.2025 |
| மனுதாரர்களுக்காக | : | திரு.R.மூர்த்தி – வழக்கறிஞர் |
| எதிர்மனுதாரருக்காக | : | திரு.R.கிருஷ்ணசாமி – வழக்கறிஞர் |

**1) மனுவின் சுருக்கம் :–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2-ம் பிரதிவாதி. எதிர்வழக்குரை தாக்கல் செய்த போது, வழக்கிற்கு தேவையான சில முக்கியமான ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர்கள் தரப்பில் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்கள் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்பதால் அவற்றை வழக்கில் ஒரு பாகமாக குறியீடு செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் ஆகும். மனுவில் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டு கூறவில்லை. இம்மனுவை அனுமதிப்பதனால் எதிர்மனுதாரருக்கு இழப்பும், சிரமமும் ஏற்பட்டுவிடும். எனவே, மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**3)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**4) தீர்வு :-**

**(அ)** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில், காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு, மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள அனுமதியளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகளை ஆட்சேபனை செய்து எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ)** மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்வதாலேயே மேற்படி ஆவணங்களுக்கு எவ்வித சட்ட வலுவும் ஏற்படபோவதில்லை. மாறாக, மனுதாரர்களுக்கு அவர்களது வழக்கினை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகும். மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும்

ஏற்படப்போவதில்லை. இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

5) **முடிவாக,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 8–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :–** இல்லை.

ஒப்பம்/– (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.